10.04.2026 O.S.371/2021 வா.சா.1 மயிலம்மாள்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

பிரதிவாதிகள் அனைவரும் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் என் இடத்தை கேட்டு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு 64 வயதாகிறது. நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் தெரியாது. சின்னதிருவேங்கட கோனார் என்பது என் அப்பா என்றால் க.திருவேங்க கோனார் என்பவர் என் அப்பா ஆவார். நான் தாக்கல் செய்துள்ள கொடிவழி பட்டியலில் சின்னதிருவேங்கட கோனார் 2 வது மனைவி சுடலியம்மாள் என்பவரின் மகள் நான் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அப்பாவிற்கு சின்னதிருவேங்கட கோனார், மற்றும் சாரு கோனார் என்ற பெயர்கள் உள்ளது என்றால் இல்லை. என் அப்பா 1975 ம் வருடம் இறந்து விட்டார் என்றால் தெரியும். வழக்கு 1 ம் தபசில் சொத்தை 1976 ம் ஆண்டில் இருந்து வைக்கோல்படப்பு வைத்து அனுபவம் செய்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நானும், பிரதிவாதிகளும் சேர்ந்து 1976 ம் ஆண்டிலேயே வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 4 முதல் 7 பிரதிவாதிகள் சேர்ந்து அவ்வாறு வாய்மொழி பாக பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் இல்லை. யார் யார் சேர்ந்து பங்கு பிரித்து கொண்டோம் என்றால் கருப்பசாமி, கிருஷ்ணன், செல்லையா, தங்கராசு ஆகியோர்கள் சேர்ந்து பாகம் பிரித்து கொண்டோம். நான் 1 முதல் 7 பிரதிவாதிகள் சேர்ந்து 1976 ம் ஆண்டு வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டதாக வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். அளந்து பாகம் பிரிக்கும் போது பொழி அமைப்பட்டுவிட்டது. கிருஷ்ணன் எப்போது இறந்தார் என்றால் தெரியவில்லை. 1 முதல் 3 பிரதிவாதிகள் அப்பா பெயர் தெரியுமா என்றால் திருவேங்கட கோனார் ஆகும். திருவேங்கட கோனார் அப்பா பெயர் கருப்ப கோனார் ஆகும். சின்ன திருவேங்கட கோனாரும், பெரிய

திருவேங்கட கோனார் இருவரும் சகோதரர்கள் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1976ம் ஆண்டு சர்வேயரை வைத்து வழக்கு 2ம் சொத்தை மேல்பாதிக்கும், கீழ்பாதிக்கும் இடையே 1 அடி நீளத்திற்கு பொழி போட்டு அனுபவித்து வருவதாக வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். 1976ம் ஆண்டு சொத்து அளந்து பிரிவினை செய்யப்பட்டதா என்றால் அளந்து தான் பிரிவினை செய்யப்பட்டது. அவ்வாறு அளவீடு செய்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்பட்ட பட்டா பாஸ் புத்தகமானது க.திருவேங்கட கோனாருக்கு கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது. வழக்கு 1ம் லக்க சொத்தை நான் தான் அனுபவம் செய்து வருவதை காட்டுவதற்கு என் பெயரிலோ, என் அப்பா பெயரிலோ எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாலுகா அலுவலகத்தில் இருந்து எனக்கு அறிவிப்பு அனுப்ப வில்லை. என் பெயரிலோ, என் அப்பா பெயரிலோ வழக்கு சொத்துக்களை பொறுத்து முன் ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 3 ஆவணமானது 2 லக்க சொத்தை பொறுத்து திருவேங்கட கோனார் மகன்கள் கருப்பசாமி, கிருஷ்ணன், செல்லையா, தங்கராஜ் பெயரில் உள்ளது என்றால் அது தவறான பட்டாவாகும். மேற்படி 4 நபர்கள் தான் சொத்தின் உண்மையான உரிமையாளர்கள என்றும், வழக்கு 2ம்லக்க சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என தவறாக உரிமை கொண்டாடுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் 1976ம் ஆண்டு வழக்கு 2ம் சொத்தை பொறுத்து மேல்பாதி, கீழ்பாதி என பிரித்து இடையே பொழி போட்டதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. ஸ்ரீரங்கராஜன், முருகன் ஆகியோர்களை தெரியுமா என்றால் ஞாபகமில்லை. ஸ்ரீரங்கராஜன், முருகன் ஆகியோர்கள் உதவியுடன் நான் வழக்கு 2ம் லக்க சொத்தில் 28.5.2020 தேதியில் சட்டவிரோதமாக அத்துமீறி நுழைந்து பொழி மற்றும் வைக்கோல்படப்பு வைக்க முயற்சி செய்தோம்

என்றால் சரியல்ல. 7ம் பிரதிவாதி திருமலைக்குமார் என் மீதும், ஸ்ரீரங்கராஜன், முருகன் ஆகியோர்கள் மீதும் புகார் கொடுத்தார் என்றால் புகார் கொடுத்தார். நாங்கள் 3 பேரும் காவல்நிலையத்தில் விசாரணைக்கு ஆஜரானோமா என்றால் சென்றோம். காவல்நிலையத்தில் ஏதோ எழுதி வாங்கி கொண்டு வெளியே அனுப்பிவிட்டார்கள. அந்த புகாரில் அத்துமீறி நுழைந்து வைக்கோல்படப்பும், பொழி அமைக்க முயற்சி செய்ததாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நானும், ஸ்ரீரங்கராஜன், முருகன் ஆகியோர்கள் சேர்ந்து காவல்நிலையத்தில் இடையூறு செய்யமாட்டோம் என்றும், நீதிமன்றம் மூலம் பார்த்து கொள்வதாக எழுதி கொடுத்தோம் என்றால் சரியல்ல. வழக்கு 2ம்லக்க சொத்து முழுவதும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட அவர்களது அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கில் கூறியுள்ளபடி கீழ்பாதி, மேல்பாதி என பிரித்தது இல்லை என்றால் சரியல்ல. என் வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு எந்த உரிமையும், அனுபவமும் இல்லை என்றும் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ். முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி (முழுபொ)
தென்காசி.